REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

இந்திய 'யோகி'க்கு பாரிசில் தண்டனை!

இரு வழக்கில் 30,000 பிராங்க் அபராதம்

சௌலாதநாத் சக்ரவர்த்தி எனும் 54 வயதுடைய இந்திய 'யோகி' ஒருவருக்கு, பிரான்ஸ் சர்க்கார் 15,000 பிராங்குகள் அபராதம் விதித்துள்ளது. அந்த யோகியார், 'தவறான முறைகளில் மருந்துகளைக் கையாண்டதா'கக் குற்றம் சாட்டப்பட்டார்.

இவர், சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே பாரிசுக்குச் சென்று, அங்கு 'யோக'ப் பயிற்சி பெற்றுவந்தாராம். செயினே மருத்துவக் கழகத்திலுள்ள பொருட்களைச் சேதப்படுத்தியதின் காரணமாக மேலும் 15,000 பிராங்குகள் அபராதம் கட்ட வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறார்.

மலர் 2] சென்னை: பங்குனி 27உ திங்கள் (11—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 30உ செவ்வாய் (12—4—55) [இதழ் 256

சரியும் ஏகாதிபத்தியம் தரும் தொல்லை

கோவா தொண்டர்களுக்கு கொடுமை

போலீசாரின் மிருகத்தனமான தாக்குதல்

கோவா சத்தியாக்கிரகிகளை போர்ச்சுகீசிய போலீசார் மிருகத்தனமாக அடித்து நொறுக்குவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சென்ற 6-ந் தேதிவரை கைது செய்யப்பட்ட எல்லா சத்தியாக்கிரகிகளும் போலீசாரால் பலமாக அடிக்கப்பட்டனராம்!

மார்கோவா மருத்துவ மனையில் 3 பேர் மிக அபாயகரமான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லும் வழி நெடுக போலீசார் அவர்களை கழிகளாலும் துப்பாக்கிக் கட்டைகளாலும் அடித்துத் தாக்கினராம்.

★

'அவமரியாதையைத் தவிர்க்க சர்க்கார் தவறிவிட்டது'

மக்கள் சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

அவசரப் பிரரேபணையை சபைத் தலைவர் நிராகரித்தார்

கோவாவில், கோவா தேசியக் காங்கிரஸ் மாநாட்டுத் தலைவர் திருமதி ஜோஷியையும், மற்றும் தொண்டர்களையும் கைது செய்து அவர்களைக் கொடுமைப் படுத்தியதின் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அவமரியாதையைத் தவிர்க்க சர்க்கார் தவறிவிட்டதென்று கூறி, அதன் மீது விவாதம் நடத்த வேண்டுமென டில்லி மக்கள் சபை உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்த அவசரப் பிரரேபணையை சபாநாயகர் மாவலங்கர் நிராகரித்துவிட்டார்.

வருமானத்தில் ஏற்றத் தாழ்வு

குறைப்பதற்கு வழியுண்டா?

நிபுணர்கள் ஆலோசிக்கின்றனர்!

புதுடில்லி, ஏப். 10—

இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட பொருளாதார நிபுணர்களின் கூட்டத்தில், நிலச்சீர்திருத்தம், வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது பற்றி ஆலோசனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

முதலீடு, கைத்தொழில் அமைப்பு, தனிப்பட்டவர்களின் முயற்சி, பொதுவான உற்பத்தி திட்டங்கள், ஊதியம், விலைவாசிகள் ஆகியவை பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாம்.

நெல் விலை சரிவு: தெற்குப் பகுதியில் நெருக்கடி நிலைமை

கையிருப்பு நெல்லை சர்க்கார் விற்பனை செய்ததின் விளைவு

சர்க்கார், தனது கையிருப்பில் இருந்த பெரும் அளவு நெல்லை விற்பனை செய்ததால், இப்போது சென்னை மாநிலத்தின் தெற்குப் பகுதி மாவட்டங்களில் நெருக்கடியான சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறது.

சென்ற மாதத்தில், சென்னை மாநில உணவு டைரக்டர் 'டெண்டர்'கள் மூலம் 11,000 டன் நெல் விற்பனை செய்திருக்கிறார். மேலும் இம்மாதத்திலும் ரூ. 10,000-க்கு டெண்டர் மூலம் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

இவ்வாறு விற்பனை செய்யப்பட்டதின் விளைவாக, நியாயமான விலைக்கும் மிகக் குறைவாக நெல் விலை சரிந்துவிட்டது.

நியாயமான விலையைவிட நெல் விலை தற்போது குறைந்துவிடவில்லை என்று கூறப்பட்டாலும், இந்தச் செய்கையால், மார்க்கெட் நிலவர நெல் விலைகள் மிகவும் இறங்கிவிட்டன என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தீமை விளைவிக்கும் 'திட்டத்'திற்கு தீவிர எதிர்ப்பு!

கடுமையான 'முறை'யை கண்ணியமுடன் ஏற்க முடிவு

கல்விச் சட்டத்தை எதிர்த்து இறுதி வரை போராட தெ. ஆ. காங்கிரஸ் துணிவு

"கல்வி சம்பந்தமாகத் தென் ஆப்பிரிக்க சர்க்கார் இயற்றியுள்ள புதிய சட்டத்தை எதிர்த்து இறுதிவரை போராட வேண்டும்,"

—என்று ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் அறிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சட்டம், கிறித்துவ மதத்தினர், மாநில சர்க்கார்கள் ஆகியோரின் நிர்வாகத்திலுள்ள ஆப்பிரிக்கருக்கான கல்வியை மத்திய சர்க்காரின் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்துவதாகும்.

"இந்தச் சட்டத்தால் சர்க்கார் ஏற்படுத்தும் கல்வி முறையின் விளைவாக ஆப்பிரிக்க மாணவர்களுக்குத் தீமைதான் விளைய முடியுமே தவிர எவ்வித நன்மையும் கிடையாது; எனவே, இதனை எதிர்த்து நாம் மேற்கொள்ள இருக்கிற போராட்டம் நெடுங்காலம் நடைபெற்று வரும் ஒன்றாகத்தானிருக்கும்; அது மட்டுமல்ல; பல கஷ்டங்களையும், துன்பங்களையும் தரக்கூடியதாகவும் இருக்கும்; எனினும், கடுமையான ஆபத்த ஏற்பாடுகளுடன் சர்க்கார் இதனை அமுல் நடத்த முன்வந்திருப்பதை நாம் எதிர்த்தே ஆக வேண்டும்."

இவ்வாறு, ஆப்பிரிக்கர் தேசிய காங்கிரஸ் கட்சியின் முடிவை வெளியிட்டுக் கூறுகையில் கட்சித் தலைவர் மாத்யூஸ் கூறியிருக்கிறார்.

தகராறு தீர்ந்தது?

கர்னூல், ஏப். 9—

ஆந்திராவிலும் சென்னை மாநிலத்திலுமாகவுள்ள எல்லா மார்க்கங்களிலும் லாரிகள், பஸ்கள் போக்குவரத்து சம்மந்தப்பட்ட எல்லா தகராறுகளும் தீர்ந்துவிட்டதாகத் தெரிகிறது.

லாரிகள், பஸ்கள் தனிப்பட்ட மோட்டார் கார்கள் சம்மந்தமாகவும் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

நிராகரிப்பு!

தங்களுக்குச் செய்த ஊழியத்தைப் பாராட்டி, பிரிட்டிஷார் இங்கு ஆட்சி நடத்துகையில், அவர்கள் கொடுத்துவந்த எல்லா அரசியல் பென்ஷன்களையும் உடனே நிறுத்திவிட வேண்டுமென்று கோரி டெல்லி மக்கள் சபையில், காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்த தனி நபர் தீர்மானம் ஒன்றை சபை நிராகரித்து விட்டது.

'மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அமைச்சர்கள் பணியாற்ற வேண்டும்'

புதிதாக பதவியேற்றவர்களுக்கு எச்சரிக்கை

"நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர தேவையான சீர்திருத்தங்களைச் செய்யாத—செய்ய முடியாத அமைச்சர்கள் மந்திரி சபையிலிருந்தும் நீக்கப்பட்டுவிடுவார்கள்,"

—என்று ஈரான் மன்னர், பதவியேற்ற புதிய மந்திரிகள் சிலரிடம் எச்சரித்துள்ளாராம்.

"நாட்டிலுள்ள பொருளாதார மீட்பு, இலஞ்ச ஒழிப்பு ஆகிய இரண்டையும் அடிப்படையாக வைத்துத்தான் சர்க்கார் இயங்கும்"

என்று ஈரானின் புதிய பிரதமர் உசேன் ஆலா கூறியுள்ளார்.

பாராளுமன்றக் கூட்டத்தின் போது, முகமது அலி ருச்டாரி எனும் உறுப்பினர், 'முசாதீக்கின் நண்பரான புதிய பிரதமராகிய ஆலா மீது நம்பிக்கை கொள்ள முடியாது' என்று குறிப்பிட்டாராம்.

ஆலைத் தொழிலாளர் மீது கண்ணீர்ப் புகை பிரயோகம்

நீக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளுமாறு ஆர்ப்பாட்டம்

ஒரு பெண்மணி உட்பட 70 பேர் கைது

அமிர்தசரசிலுள்ள பஞ்சாலை ஒன்றின் அருகில் சுமார் 2,000 பேர் அடங்கிய கூட்டமொன்றைக் கலைக்க போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

இதற்கு முன்னர், ஆலையின் பக்கத்தில் ஒரு பெண்மணி உட்பட 70 பேரைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

கூட்டத்தினர் பலாத்காரச் செயல்களில் இறங்கிவிட்டதால் போலீசார் தற்காப்புக்காகக் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர் என்று அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

சென்ற இரண்டு வாரங்களுக்கு முன்னால், மாவட்ட மாஜிஸ்திரேட், 144-வது பிரிவின் கீழ் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதித்திருந்தார். அதே நேரத்தில் ஆலை நிர்வாகத்தினரால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட சில தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு தொழிலாளர்கள் ஆலைக்கு வெளியில் உட்கார்ந்து கொண்டிருந்தனராம். அவர்களைக் கலைந்துபோகச் செய்வதற்காகத் தடியடி, கண்ணீர்ப் புகை பிரயோகத்தில் இறங்கினராம்!

மசூலிப்பட்டணம் துறைமுகத்திலிருந்து 1953-ல் 21,922 டன்னும் 1954-ல் 27,300 டன்னும் கனி இரும்பு ஏற்றுமதிசெய்யப்பட்டது.

பள்ளிகளில் போதனை மொழி

சர்க்காரின் புதுக் கொள்கை

பம்பாய், ஏப். 10—

ஆங்கில மொழி உட்பட எந்த மொழியிலாவது பாடங்களைப் போதிக்க அடுத்த கல்வி ஆண்டிலிருந்து பம்பாயிலுள்ள ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளின் பெற்றோர், தங்கள் குழந்தைகளுக்கு எந்த மொழியில் கல்வி கற்றுத்தர வேண்டும் என விரும்புகிறார்களோ, அந்த மொழியிலேயே கற்றுக்கொடுக்க வற்புறுத்துவதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு என்று அண்மையில தலைமை உயர் நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) கூறியிருந்த தீர்ப்பின்பேரிலேயே சர்க்கார் இப்புது கொள்கையைக் கடைப்பிடிப்பதாகக் கூறியிருக்கிறது.

ஆங்கில மொழியிலேயேதான் கல்விப் பயிற்சி அளிக்க விரும்பும் பள்ளிகள், சர்க்கார் கல்வி இலாகாவிற்கு சில பிரச்சினைகளில் திருப்தி அளிக்க வேண்டியிருக்குமென்றும் கூறப்படுகிறது.

பம்பாய் சர்க்காரின் இப்புதிய கொள்கைப்படி ஒரே பள்ளியிலேயே ஆங்கிலத்திலும் இதர இந்திய மொழிகளிலும் வகுப்புகள் நடத்தவும் கூடும் என்று தெரிகிறது.

ஜெய்ப்பூர், ஏப். 10—

இந்நகரில், நடந்த 2 நாட்களில், விற்பனை வரி எதிர்ப்புக் கிளர்ச்சியை யொட்டி, 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம். இன்னும் நகரில் கிளர்ச்சி நீடித்துக் கொண்டிருப்பதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

'தெளிவில்லாத இலட்சியம்—மக்கள் குழப்பமடையக்கூடாது!'

"ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள 'சோஷலிச மாதிரி சமுதாயம்' என்ற தெளிவில்லாத இலட்சியம் குறித்துப் பொதுமக்கள் குழப்பமடையக் கூடாது"

என்று, பி. சோ. கட்சியின் தேசிய நிர்வாகக் குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்றில் காணப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 11—4—'55 திங்கள்

பொங்கி வழிகிறது—புத்தறிவு!

"தன்னை அறிந்து இன்பமுற,
வெண்ணிலாவே!
ஒரு தந்திரம் நீ சொல்ல
வேண்டும், வெண்ணிலாவே!

என்று பக்திப் பெருக்கிலே பாடியுள்ளனர்!

"நிலா! நிலா! வா! வா!
நில்லாமல் ஓடி வா!"

என்று காதலால் கசிந்துருகிப் பாடியிருக்கிறார்கள்!

"சுட்டுச் சுடர் விழிதான்
கண்ணம்மா! சூரிய சந்திரரோ!
வட்டக் கரிய விழிகள்,
கண்ணம்மா! வானத்துத்
தாரகையோ!"

என்று கவி அரசர்கள் பாடினர்.

ஞாயிறு, திங்கள், விண்மீன், அந்தி வானம்—இவை குறித்துப் பலர் பல்வேறு காரணங்களுக்காகப் பாடினர்—பாவசப்பட்டுமிருக்கின்றனர்; ஆனால், யாரும் வானத்தையோ அதிலே மின்னிடும் விண் மீன்களையோ, வட்ட நிலவையோ, கொட்டும் கதிரவனையோ, தாய கத்தை மீட்டுத் தரச் சொல்லிக் கவிதை பாடினாரில்லை.

வானத்தை அண்ணாந்து பார்த்தோ, வளர் நிலவின் போக்கைக் கணித்தோ, நட்சத்திரங்களின் நடமாட்டத்தைக் கணக்கெடுத்தோ, நாட்டின் விடுதலையைப் பெற்றவர், அவனியில் எங்கும் இல்லை.

எனினும், வானத்தை அண்ணாந்து பார்த்துப் பார்த்து, 'இது நடக்கும்; இது பலிக்கும்; இது கிடைக்கும்; இப்படி ஆகும்'—என்று கூறியும், 'இன்ன கிரகத்துக்கும்-இன்ன கிரகத்துக்கும் இத்தகைய தொடர்பு இருப்பதால், இன்ன காரியம் இவ்வண்ணம் நடைபெறும்,' என்று எடுத்துக் கூறியும் வரும் 'சோதிடம்,' ஒரு 'கலை'யாகி இருக்கிறது! அதை நம்பி, உள்ளத்தை நைந்து போகச் செய்து கொள்ளும் 'நல்லவர்கள்' நாட்டிலே ஏராளமாக உள்ளனர்!

நேரு பண்டிதர், பார்ப்பனர்!—ஆமாம்! புரோகிதம், ஜோதிடம், ஆராதனை, அர்ச்சனை ஆகியவைகளைப் பிழைப்புக்கு வழியாகக் கொண்டு பன்னெடுங்காலமாகப் பாமரரை ஏய்த்துப் பிழைக்கும் பார்ப்பன குலம்!!

அவர், ஜோதிடத்தைக் கண்டிக்கிறார் — ஒளிவு மறைவு இன்றி!

"இந்தப் பெரியத் துணைக் கண்டம் இருக்கிறதே—இந்தியா, இது விடுதலை பெற்றது எங்ஙனம், ஐயா? வானத்தை அண்ணாந்து பார்த்தும், நட்சத்திரங்களின் போக்கைக் கண்டறிந்துமா நாட்டை மீட்டோம்? நீங்களும் நானும் போராடி, தியாகம் செய்து நாட்டை மீட்டோம்; சந்திரனோ, நட்சத்திரமோ, நமக்கு நாட்டை மீட்டுத்தரவில்லை!"

என்று நேரு பண்டிதர் எடுத்துரைத்து, ஜோதிடத்தை நம்பும் இளித்தவாயர்களைக் கேலி செய்கிறார்.

"நான் ஜோதிடர்களை விரும்பவில்லை; ஜோதிடர்களிடம் போகிறவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வதுடன், பிறருக்கும் கெட்ட வழியைக் கற்பிக்கிறார்கள்; நீங்கள் ஜோதிடர்களிடம் போகக்கூடாது; நீங்கள் தன்னம்பிக்கையுடன் உங்களுடைய கர பலத்தை நம்பி வாழவேண்டும்; நீங்கள் ஆகாயத்தையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் அண்ணாந்து பார்த்து நம்பிக்கொண்டிருக்கக் கூடாது; நீங்களும் நானும் செய்த தியாகங்கள், போராட்டங்களால் நாடு சுதந்திரமடைந்தது; சந்திரனும், நட்சத்திரங்களும், ஆகாயமும், தேசத்தைச் சுதந்திர மாக்கவில்லை"

பண்டித நேருவின் பேச்சு இப்படி இருந்திருக்கிறது.

முழு நிலவு அழகை அள்ளி வீசிற்றும்! உயரிய தேரோ மேடைமீது ஏறி நின்று, நேரு பண்டிதர் இவ்விதம் பேசினாராம், ஏப்ரல் 6-ல்!

'இதைப் போன்ற அறிவுரையை ஆற்றலுடன் பேசுவதானால் பண்டிதர் எவ்வளவு உயரமானமேடையில் வேண்டுமானாலும் ஏறட்டும்,' என்று கூறத் தோன்றுகிறது! அட்டா! தவறு! தவறு!! அவர் ஏறி நின்று கூறுவது கூடாது! கீழே இறங்கிவந்து, மக்களிடம் நின்று, இத்தகைய மதிமிகு கருத்துரைகளைப் பண்டிதர் அளித்திட வேண்டும் — அதிலும் காங்கிரஸ் அன்பர்களிடம் அதிகமாக இது போன்றவை பற்றி எடுத்துரைக்க வேண்டும்; அவர்களில் மிக மிகப் பெரும்பாலோர், பழைமையின் பிடியிலே நாடு சிக்கி இருக்க வேண்டுமென்பதற்காக, அரும்பாடுபடும் 'அறிவாளர்கள்' ஆக இருக்கிறார்கள்; சின்னாட்களுக்கு முன்னர் ஒரு காங்கிரஸ் மந்திரி தன்னை 'ஜோதிடர்' என்று கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டதுடன், அந்த வட்டார ஜோதிடர் சங்கத்துக்குத் தலைவருமானதாக பத்திரிகைச் செய்தி கூறிற்று. இத்தகைய வட்டாரத்தில், பண்டிதர் பேசுதல் வேண்டும்.

"மூடா! மூடா!! ஆசிய — ஆப்பிரிக்க ஒற்றுமை, ஆஸ்திரேலியா - அமெரிக்கா கூட்டுறவு, அணுகுண்டு - நீர்வளிக் குண்டு விளக்கம் இவை போன்றவை பற்றிப் பேச வேண்டியவரன்றோ எமது 'அவனி புகழ்' தலைவர்; தேவலம், ஜோதிடம் - மாந்திரீகம் - மோடி இவை பற்றியா அவர் பேசுவது!"—என்று கேட்பர் காங்கிரஸ் அன்பர்கள்!

இந்த நாட்டு மக்களின் நிலைமையைக் கவனிக்கும்போது, இப்போது அவசர அவசரமாக, ஆற்றலுள்ள பெரும் தலைவர்கள் பேச வேண்டியது, 'பகுத்தறிவுத் துறை பற்றியதேயாகும்,' என்பதை அறியலாம்!

ஒருபுறம் கண்ணை மயக்கி, கருத்தை மலரச் செய்யும் 'நவ நாகரீக' சாதனங்கள் கொலு வீற்றிருக்கின்றன; மற்றோர் புறமோ, ஆல மாமும் அரச மரமும், குளத்தங்கரையும் காவடியும் ஆட்சி செலுத்துகின்றன!

'ஒருபுறம்—மற்றோர் புறம்' —என்றுகூடக் கூறுவதற்கில்லை. நவ நாகரீகச் சாதனமான மோட்டாரில் பயணம் செய்துவரும் 'காவடி தூக்கும் பக்தர்'கூடத் தெரிகிறார்; நவ நாகரீகச் சாதனங்களைச் சுவைத்துக்கொண்டே, பழைமையின் அருமை பெருமை பற்றிப் பேசிடும் 'மேதைகள்' நிரம்ப உளர்; எனவே நேரு போன்றார், பகுத்தறிவு குறித்துப் பாமரர் தெளிவுபெறும் வகையில் அடிக்கடி அறிவுரை யாற்றுதல் வேண்டும்.

ஏதோ, ஓரோர் சமயமாவது இவர் பேசுகிறார்—மகிழ்கிறோம்! இவரோ, பண்டிதர்! 'பழைமையின் பிரதிநிதி' எனப்படும் பார்ப்பன குலம்! 'விரட்டியடிக்கப்பட வேண்டிய குலம்!' பூண்டோடு அழித்தொழித்திடப் படவேண்டிய குலம்! அந்த அரும்பணியாற்றிடும் ஆற்றல் தமக்கு இருப்பதாக—தமக்கே இருப்பதாக—அடிக்கடி குத்திக் காட்டிக் குதூகலிக்கும் வீரர் இருக்கிறார், இங்கு!

'விரட்டியடிக்கப்பட வேண்டிய குலம்,' என்று கூறப்படும் பார்ப்பன குலத்தவரான பண்டித நேரு, பழைமையின் மிக அருவருக்கத்தக்க, ஆபத்தளிக்கத்தக்க ஒரு ஏற்பாடான ஜோதிடத்தை இவ்வளவு வன்மையாகக் கண்டிக்கிறார்! 'பச்சைத் தமிழர்,' என்ற பட்டம் பெறத் தக்கவரும், 'வீரர், தியாகி' என்று போற்றப் படுபவரும், சுயமரியாதை இயக்கத் தொடர்பு கொண்டவரும், சுயமரியாதை இயக்கத் தோழர்களிடம் தோழமை கொண்டவரும், பெரியாரின் பேரன்புக்குப் பாத்திரமான வருமான டாக்டர் வரதராசுலு பேசி இருக்கும் புத்தறிவு பொங்கி வழியும் பேச்சைக் கேளுங்கள்:—

"குழந்தைகளுக்கு சகுந்தலை, அரிச்சந்திரன், கண்ணகி, நல்லதங்காள் முதலிய கதைகளைக் கற்றுக் கொடுத்து அவற்றை நாடகமாகப் பயிற்சி அளித்தலும் நலம்."

ஆரம்பப் பாடசாலையின் ஆண்டு விழாவில் டாக்டர் பேசுகிறார், இது போல்—சென்னையில்!

இவருக்கு, இக்காலத்தில், 'நல்லதங்காள்'ளும், 'அரிச்சந்திர'னும் வேண்டுமாம்!

இது, திராவிட டாக்டரின் நிரைப் பேச்சு!

ஆரிய நேரு, "ஜோதிடம் பொய்; அதை நம்புவது முட்டாள்தனம்; ஜோதிடர்கள் ஏமாளிகள்; அவர்களை நம்புகிறவர்களும் ஏமாளிகள்," என்று பழைமையைக் கண்டிக்கிறார்.

திராவிட டாக்டரோ, "'நல்லதங்காள்' வேண்டும்; 'அரிச்சந்திரா' வேண்டும்"—என்று பேசுகிறார்!

தேசிய வளர்ச்சிக்கு இது, தேவையாம்!

இதுபோன்றே ஒரு திங்களுக்கு முன்பு சென்னை மேல் சபையில், "'பஞ்சகவ்யம்' (மாட்டின் சிறுநீர் கலந்து அளிக்கப்படுவது) புனிதமானது, அதை உட்கொள்வது புண்யம், அது நமது பூர்வீகப் பெருமையின் அடையாளம்" என்று ஒரு உறுப்பினர் 'பக்தி'ப் பெருக்குடன் பேசினார். அவர் ஓர் திராவிடர்! அண்ணாமலை எனும் பெயருடையார்!

"இது பைத்தியக்காரத்தனம்! சாணியையும், சிறுநீரையும் உட்கொள்வது அறிவுடைமையாகுமா! சாஸ்திரத்தின் பெயரால் இப்படி ஒரு மடமை இருக்க அனுமதிப்பதா?" என்று ஒரு உறுப்பினர் இடித்துரைத்தார்—இவர் சீனுவாசன் எனும் பெயருடைய ஆரியர் என்று அறிகிறோம்!

திராவிடருவில், ஆரியம் சீறிப் படமெடுத்தாடுவதையும், ஆரிய உருவுக்குள்ளேயும் திராவிடம் விரும்பும் அறிவாற்றல் மெள்ள மெள்ள தலைகாட்டுவதையும் எடுத்து விளக்குவது போல, இவர்கள் போக்கும், நோக்கும் இருந்திடக் காண்கிறோம்.

ஆரியரை அடியோடு ஒழித்துக்கட்டி வெளியேற்றும் அந்த அதி அற்புதமான 'மங்கள நாள்' என்றோ, நாமறியோம் —நடத்தி வைக்கப் போகும் நண்பருக்கல்லவா தெரியும்!

வெளியே அவர்கள் போய் விட்ட பிறகு, வீர இனத்தவரான டாக்டர் வரதராசுலு போன்றவர்கள் இங்கிருந்து கொண்டு, "'அரிச்சந்திரா' வேண்டும்; 'நல்லதங்காள்' வேண்டும்,"—என்று பழைமையைக் கக்கிக்கொண்டு இருப்பதானால், நாடு எங்ஙனம் முன்னேறும் — நமது இலட்சியம் எங்ஙனம் ஈடேறும் என்பதை, ஆலைக் கண்டு மிரளும் போக்குதான் 'கொள்கை — வீரம்' — என்று எண்ணிடும் அன்பர், எண்ணிப் பார்த்திட, அருமையான வாய்ப்பு இது!

தேங்கிக் கிடந்த கைத்தறித் துணி கணிச அளவில் குறைந்தது!

75-நாட்களில் ரூ. 11-லட்சத்திற்கு விற்பனை

சென்னை, ஏப். 8— சென்ற திங்கள் இரண்டாவது வாரத்தில் மாநில முழுமையிலும் நடைபெற்ற கைத்தறி வார விழாவின் காரணமாக, இம்மாநிலத்தில் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளின் அளவு கணிசமாகக் குறைந்து விட்டதாம்!

கடந்த 75 நாட்களில்—அதாவது, இவ்வாண்டு ஜனவரி திங்கள் மத்தியிலிருந்து மார்ச் மாத இறுதிவரையில் மட்டும் ரூ. 11-லட்சம் பெறுமான கைத்தறித் துணிகள் விற்பனையாயிற்று.

இவ்வாண்டு ஜனவரி திங்களில் தேங்கிக் கிடந்த ரூ. 50 லட்சம் பெறுமான துணிகள், இந்த மார்ச் திங்களில் ரூ. 39 லட்சம் பெறுமான அளவுக்குக் குறைந்துவிட்டது என்றும், மேலும், சென்னையில் நடைபெற்ற கைத்தறிக் கண்காட்சியில் ரூ 93,082-க்கு கைத்தறித் துணி விற்பனையாகியிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் நடைபெற்ற இதே கண் காட்சியில் ரூ. 43,000-பெறுமான துணிகள் தான் விற்பனையானது (அதாவது இவ்வாண்டில் விற்பனையானதில் பாதிக்கும் குறைவு என்பது இங்கு கருதத் தக்கது.)

நீர்வளிக்குண்டு: ஆங்கில மகளிர் எதிர்ப்பு

நீர்வளிக்குண்டுகள் தயாரிக்க பிரிட்டிஷ் சர்க்கார் மேற்கொண்டுள்ள முடிவை, 'சர்வதேசப் பெண்கள் சமாதான நிறுவன'த்தின் பிரிட்டிஷ் பெண்கள் நிறுவனம் வன்மையாகக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

அவைகள் எங்கே?

அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குள் ரூ. 1,200 கோடி செலவில் 5,000 கல் தொலைவுள்ள புது இரயில் பாதைகள் போடப்படுமாம்!

நாடு முழுமையிலுமுள்ள குறுகிய பாதைகளை, 'மீட்டர் கேஜ்'களாகவோ, அல்லது 'பிராட் கேஜ்'களாகவோ மாற்ற சர்க்கார் உத்தேசித்துள்ளதாம்!

எல்லா இரயில்களும் மின்சார இரயில்களாக மாற்றுவதற்கு சர்க்கார் விரும்புகிறதாம்!

சமாதான உறவு!

'ஜெர்மனியுடன் பகை நாடு' என்ற நிலைமையை நீக்கிவிட்டதாகவும், இப்போது அதனுடன் சமாதான உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதாகவும், சீன ஜனாதிபதி மா-சே-துங் அறிவித்திருக்கிறார்.

ஜெர்மனி பிரிந்து கிடப்பதால் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்வது அசாத்தியமாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வெறும் உபதேசத்தால் வேற்றுமை தீராது!

அமெரிக்க மனப்பான்மைக்குக் கண்டனம்

"இந்தியாவிற்கும்— அமெரிக்காவிற்குமிடையே கருத்துவேற்றுமைகள் வளர்ந்து வருகின்றன. அமெரிக்கா, ஆசியாவிற்கோ அல்லது இந்தியாவிற்கோ 'வெறும் உபதேசங்கள்' செய்துவிடுவதால் மட்டும் அவ் வேற்றுமைகளைத் தீர்த்துவிட முடியாது."

"அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குபவர்கள் ஒரு நெருக்கடியிலிருந்து இன்னொரு நெருக்கடியை உருவாக்கி விடுகிறார்கள்; இதைத் தவிர, நல்லதொரு நீண்டகாலக்கொள்கை எதையுமே அவர்கள் உருவாக்க வில்லை."

மேற்கண்டவாறு இந்தியாவில் முன்னாள் அமெரிக்கத் தூதுவராக இருந்த செஸ்டர் பௌல்ஸ், அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையைக் கண்டித்து சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

மேலும் அவர், ஆப்பிரிக்கக் கண்டத்தை, 'அமெரிக்காவின் காலனி நாடு,' என்று கருதும் அமெரிக்க மனப்பான்மை நீக்கப் பட்டாகவேண்டும் என்றும், தற்போது அங்கு உருவாகி வரும் 'சுதந்திர விழிப்பு'ச் சூழ்நிலையை அமெரிக்கா உணர்ந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

ஆப்பிரிக்காவின் பிரச்சினையில் அமெரிக்கா ஒரு 'தனிக் கொள்கை'யைத் தீட்ட வேண்டும் என்றும், ஆசியா பற்றிய பிரச்சினைகளிலோ, மேலும் 'தெளிவான கொள்கை'களைப் பின்பற்ற வேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

'திருவிளையாடல்' அல்லவே!

14 ஆண்டுகாலமாக கண்ணொளி மறைந்து குருடாகியிருந்த 80 வயது முதுகிழவர் ஒருவர் மீண்டும் தமது கண்பார்வை கிடைக்கப் பெற்ற அதிசயச் சம்பவம் ஒன்று இங்கு நடைபெற்றதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்தச் சம்பவம் நாஞ்சில் பகுதியிலுள்ள நாகர்கோவிலில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

டார்லிங்டன் எனும் 80 வயது கிழவர், ஒரு இருட்டு அறையில் கரி எடுத்துக்கொண்டு இருக்கும் போது, திடீரென தடுமாறி சுவரில் மோதிக்கொண்டதாகவும், தலையில் பலமான அடி ஏற்பட்டதாகவும், ஆனால் இதன் விளைவாக அவரது நெடுநாள் குருட்டுக் கண் மீண்டும் தன் முன்னிலை பெற்றது என்றும் தெரிகிறது.

கல்விக்கு ரூ. 880 கோடியாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெறுமாம்!

புதுடில்லி, ஏப். 9—

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கல்வி அபிவிருத்திக்கென மொத்தமாக ரூ. 880 கோடி செலவாகுமென்றும், இத்தொகையில் இடைநிலைப் பள்ளி கல்விக்கென ரூ. 300 கோடிக்குமேல் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளதென்றும் இங்கு நடைபெற்ற கல்வி இலாகா செயலாளர்கள், டைரக்டர்கள் ஆகியோரது மாநாட்டின்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள சாதாரண பள்ளிகளில், 2,500 பள்ளிகளை, வரும் 1961-ம் ஆண்டிற்குள்ளாகவே பலநோக்கு உயர்தர இடைநிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றும் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆதாரக் கல்விப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்ச சம்பள விகிதத்தைப் பற்றியும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி பெறாத ஆசிரியருக்குக் குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளம் ரூ. 50; அதற்குக் குறைவாக வாங்குவோருக்கு இப்போது கொடுக்கப்படும் சம்பளத்திற்கும் ரூ. 50-க்கு முள்ள வித்தியாசத் தொகையைத் தந்துவிடுவது; மெட்ரிகுலேஷன் தேறிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் ரூ. 75; மெட்ரிகுலேஷன் தேறாது பயிற்சி பெற்ற ஆசிரியருக்கு ரூ. 60 என்றும் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

ஆதாரப் பள்ளிகளில் இரண்டு ஆசிரியர்களுக்காவது குடியிருப்பு வசதி செய்து தரப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 5 லட்சம் வீதம் பள்ளிக்கூடப் பகல் உணவுக்கும், ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்ட கடன் உதவிக்காக ரூ. 20 கோடியும் திருப்திகரமான வீடுகள் கட்டித்தரும் திட்டத்துக்கு ரூ 277 கோடி பிடிக்கும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

தற்போதுள்ள பள்ளிகளை சீர்திருத்திக் கட்டுவதற்கு அடையாள முறையில் ரூ. 10 கோடி ஒதுக்கப்படுமாம்.

இது தவிர, கரக்பூரிலுள்ள உயர்தரத் தொழில் நுட்பக் கல்லூரியைப் போலவே பம்பாய்க்கு அருகில் ஒன்றும், தென்னாட்டியில் ஒன்றுமாக மேலும் இரண்டு கல்லூரிகள் புதிதாகத் திறக்க முடிவெடுக்கப்பட்டிருக்கிறதாம்.

கோவா சர்க்கார்— இராணுவம் அதிருப்தி?

பம்பாய், ஏப். 8—

கோவா கவர்னர் மாளிகையில் வெடி குண்டு வைக்கப்பட்டிருந்த செய்தி ஒன்று அண்மையில் வெளிவந்தது அது சம்பந்தமாக கோவாவில் போர்ச்சுகீசிய உயர்தர இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக இப்போது ஒரு தகவல் கிடைத்திருக்கிறது.

இதினின்றும், அந்த வெடி குண்டு சம்பவத்திற்கு கோவா தேசீயவாதிகள்தான் காரணம் என்பது தவறு என்று நிரூபிக்கப்படுகிறதாம்.

தற்போது கோவா இராணுவத்தினருக்கு, சர்க்காரின் மீது அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வாழ்க்கை முறைக்கு அணுசக்தி!

அணுசக்தியைய மக்களின் வாழ்க்கை முறைக்குப் பயனடையும் வகையில் பயன் படுத்துவதற்கென தங்களிடையேயுள்ள கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதற்காக இந்திய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கட்கு பிரெஞ்சு விஞ்ஞானிகள் அழைப்பு விடுத்துள்ளதாகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சூரிய கிரகணத்தை ஆராய்வர்!

மணிலா, ஏப் 8—

வருகிற ஜூன் திங்கள் 27-ந் தேதியன்று பிலிப்பைன் தீவுகளில் தெரியவிருக்கும் சூரிய கிரகணம் ஏழு நிமிட நேரம் நீடித்திருக்குமாம்.

இந்நிகழ்ச்சி, பல ஆயிரம் ஆண்டுகட்கு இடையில் ஒருமுறை ஏற்படக் கூடிய அதிசயிக்கத்தக்க ஒன்று என்றும், இதனை ஆராய்ச்சி செய்ய உலகின் பல பகுதிகளிலிருந்தும் வான ஆராய்ச்சியாளர்கள் வருவர் எனவும் கூறப்படுகிறது.

குஷ்ட நோய்க்கு குறுகிய கால பயிற்சி

சென்னை சர்க்கார் உத்தரவு

சேலம், ஏப் 8—

குஷ்டரோக நோய் பயிற்சி பற்றி மருத்துவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி தர சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர் என்று சென்னை சுகாதார அமைச்சர் ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

இக்குஷ்டரோக நோய் சென்னை மாநிலத்தில், செங்கல்பட்டு, வட, தென் ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில்தான் அதிகமாகப் பரவியுள்ளதெனத் தெரிவித்திருக்கிறார்.

இந் நோயைத் தீர்ப்பதில் 'சல்போன்' மருந்து ஓரளவு நல்ல பலன் அளிப்பதாகவும், ஒரு ஆண்டு காலத்திற்கு அதிகமாக வாவது பரவாமலிருக்கச் செய்கிறது என்றும் குறிப்பிட்டார்.

ஏழ்மையை விரட்ட முடியுமா?

புதுடில்லி, ஏப். 8—

இளைஞர்களிடையே பெருவாரியாக நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்ட பிரச்சினையைத் தவிர்க்கவும், அவர்களிடையே நிலவும் ஏழ்மையைப் போக்கவும் குடிசைத் தொழில் நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதென அகில இந்திய இளைஞர் காங்கிரசில் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

செய்திச் சுருள்

★

ஐந்தாண்டுத் திட்ட கண்டனக் கூட்டம்

திருத்துறைப்பூண்டி, ஏப். 8—

26-3-55 மாலை 6-30 மணிக்கு இந்நகரில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் அறிவுடைநம்பி சிறிதுநேரம் பேசியபின், தோழர் க. அன்பழகன் அவர்கள், ஐந்தாண்டுத் திட்டத்தின் பேரால் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியையும், 'தமிழர்' மேலும் மேலும் துயரத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக்கப்பட்டு வருவதையும் விரித்துரைத்தார்.

நெடும்பலம் தி. மு. க. செயலாளரால் ஓர் கைத்தறி மேலாடை தோழர் அன்பழகனுக்கு அணிவிக்கப்பட்டது.

* * *

திருமழிசை, ஏப். 8—

30—3—55 மாலை தோழர் டி கே. போரூரான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். வி நடராசன், வி. எஸ். கோவிந்தராசன், டி. சண்முகம் எம் எல்.ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* * *

பட்டிவீரன்பட்டி, ஏப். 8—

27—3—55-ல் நடைபெற்ற இவ்வூர் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெங்களூரில் திருக்குறள் மாநாடு

"மே திங்கள் 14, 15 ஆகிய இரு நாட்களிலும், பெங்களூர் டாஸ்கர் டவுன், நகர சபை உயர்நிலைப் பள்ளி (பினாக் பள்ளி) மைதானத்தில் நடைபெறும். தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் 'வில்லுப் பாட்டு' நிகழ்ச்சிக்கும், திருக்குறள் கண்காட்சிக்கும் ஏற்பாடாகி இருக்கிறது; மாநாட்டில், தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வர்.

மாயவரம் நடராசன் வாசகசாலை ஆண்டு விழா

27—3—55 காலை 10 மணிக்கு சின்னகடைத் தெரு வாசகசாலையின் முன்பாக மேற்படி ஆண்டு விழா தோழர் அருணசலம் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஆண்டு அறிக்கை படித்த பின் தோழர் மெ சுந்தரம் பேசியதும் தோழர் பாரதிதாசன் அவர்கள் மாயவரம் நடராசனின் தொண்டையும், தியாகத்தையும் விளக்கிப் பேசினார். இறுதியாக தோழர் அன்பழகன் அவர்கள், நடராசன் அவர்களது இலட்சியத்தையும், இன்றைய தி. மு. கழகத்தின் பணியையும் விளக்கிப் பேசினார்.

தண்ணீரை அசுத்தமாக்குவதின் தீய விளைவுகள் குறித்து எச்சரிக்கை

நாகரீகங்கள் தோன்றிய பகுதிகளில் நாட்டு மக்களின் நடைமுறை பற்றி கவலை

அறியாமைக்கு இலக்காகி மடியும் மக்களின் எண்ணிக்கையை தருகிறார் மத்திய சுகாதார அமைச்சர்

"நாகரீகங்களும், கலாச்சாரங்களும், யாங்ட்சி, நைல், யூப்ரடிஸ், சிந்து, கங்கை போன்ற நதிப் பிரதேசங்களிலேயே தோன்றி வளர்ந்தன; இந்நாகரீகங்கள் வளர்ந்தோங்கி வரும்போதே, இப்பிரதேசங்களில்பெருகிய மக்கள் தொகையினர், தங்கள் வாழ்க்கைக்கே ஆதாரமான தண்ணீரை அடிக்கடி அசுத்தம் செய்துவிட்டனர்,"

என்று, மத்திய சர்க்கார் சுகாதார அமைச்சர் அமிர்தகௌரி, உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, 'சுத்தமான தண்ணீரே நல்ல ஆரோக்கியத்திற்கு ஆதாரம்' என்ற தலைப்பில், அ. இ. வானொலி மூலம் ஒலிபரப்பிய சொற்பொழிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இந்தியாவின் மக்கள் தொகையில் 80 சதவிகிதத்தினர், கிராமப் பிரதேசங்களில் வசித்துவருகின்றனர்; இவர்களில் பெரும்பான்மையினர், குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படாத தண்ணீர் ஆதாரங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையிலுள்ளனர்; கிணறுகள், குளங்கள், ஊற்றுக்கள், ஓடைகள் ஆகியவைகள்தான் இப்பெரும்பான்மை மக்களின் தண்ணீர் ஆதாரங்கள்.

இப்புள்ளி விவரங்களிலிருந்து நாம் சமாளிக்க வேண்டிய பிரச்சினை எவ்வளவு மகத்தானதென்பது நன்கு விளங்கும். சுகாதார விதிகள் தெரியாததால், மக்கள், தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொள்ளுகிறார்கள்; அறியாமையின் காரணமாக தங்களுக்கே கெடுதல் விளைவிக்கும் வகையில் தங்கள் தண்ணீர் விநியோக ஆதாரங்களை அசுத்தப்படுத்துகிறார்கள்; உலக முழுவதிலுமே குடி தண்ணீர் ஆதாரங்களை அசுத்தப்படுத்தும் பழக்கங்களில் மனிதனின் கழிவுப் பொருள்களை இவற்றில் போடும் துர்ப்பழக்கம் ஒன்றாகும்.

கும்பமேளா போன்ற பெரிய விழாக்களில் லட்சக்கணக்கான மக்கள் ஒரேயிடத்தில் கூடுவதும், அறியாமையின் விளைவாக அசுத்தமான தண்ணீரை அருந்துவதும், காலராவினால் தாக்கப்படுவதும், இந்நோயைத் தங்கள் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் உடன் கொண்டு போவதும், இதனால் இம்மாதிரியான தொத்து நோய்கள் பரவுவதும் நமக்குச் சர்வ சாதாரணமாகப் போய்விட்டது.

"அசுத்தமான தண்ணீரையோ, அல்லது அசுத்தமான தண்ணீர் கலக்கப்பட்ட பாலையோ அருந்துவதினால், 'டைபாயிட்' போன்ற விஷக் காய்ச்சல்களினால், பல்லாயிரக்கணக்கான மக்கள் நோய்க்காளாவது நமக்குத் தெரியாத ஒன்றல்ல; காலராவினால் ஆண்டிற்கு 50,000 பேர்களும், சீதபேதி வயிற்றுப் போக்கு வியாதிகளினால் ஆண்டிற்கு 1,70,000 பேர்களும் மரணமடைகின்றனர்; பலவித நோய்களினால் இயற்கையெய்தியவர்களின் மொத்த எண்ணிக்கை 38 லட்சமாகும்; புள்ளி விவரங்களைக் காட்டி மக்களைப் பயமுறுத்த வேண்டுமென்பது என்னமல்ல; ஆனால், நாட்டு மக்களின் சுகவாழ்வுக்கு, சுத்தமான தண்ணீர் எவ்வளவு முக்கியமானதாகும் என்பதை எடுத்துக்காட்டுவதே, இன்றைய நோக்கமாகும்," என்றார்.

புத்தர் பிறந்த இடம் பௌத்த வனமாகும்!

இந்திய சர்க்கார் அங்கீகாரம்

புத்தர் பிறந்த இடமாகிய லும்பினியில், இரண்டு சதுர மைல்களுக்கு ஒரு பௌத்த வனம் வீதம் அமைக்கப்படுமாம்!

இதற்கான திட்டத்தை இந்திய சர்க்கார் அங்கீகாரம் செய்துள்ளதென்றும், இதனை அமைப்பதில் இந்திய சர்க்கார் எல்லா வசதிகளையும், உதவிகளையும் செய்யும் என்றும் நேரு பண்டிதர் வாக்களித்துள்ளாராம்.

அமைக்கப்பட இருக்கிற பௌத்த வனத்தில் ஒரு தங்குமிடம், படிப்பதற்கான புத்தகசாலை ஆகியவை இருக்குமாம்.

இது போன்ற பௌத்த வனம் ஒன்றை சாரநாத் எனும் இடத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

கையெழுத்திட்டார்!

மேற்கு ஜெர்மனிக்கு அரசாங்க உரிமை தந்து ஆயுதபாணியாக்கும் பாரிஸ் ஒப்பந்தங்களில் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் கையெழுத்திட்டுவிட்டாராம்.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்', இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்', கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்', என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்", சென்னை. 4—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

****

சோவியத் நாட்டில் கள்ள மார்க்கெட்!

'ஈனத் தொழில்' என எச்சரிக்கை

ஒரு சில குறிப்பிட்ட பொருட்கள் தற்காலிகமாகப் பற்றாக்குறையாக இருப்பதால், சோவியத் நாட்டில் மீண்டும் 'கள்ள மார்க்கெட்' வியாபாரிகள் தலைதூக்கியிருக்கின்றனர் என்று மாஸ்கோ வானொலிச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த 'ஈனத் தொழிலை' உடனடியாக எதிர்த்து கடுமையாகப் போராட வேண்டுமென்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

'பற்றாக்குறைப் பண்டங்க'ளில் பாரபின் மெழுகு, சோப்பு, தையல் இயந்திரம், தீப்பெட்டி, உப்பு, மண் பாண்டங்கள், விளக்குக்கான கண்ணாடிச் சிம்னிகள் ஆகியவை இடம் பெற்றுள்ளனவாம்!

'இங்கே' மூடு விழா! - 'அங்கே' திறப்பு விழா!

பெங்களூர், ஏப். 10—

கோலார் தங்கச் சுரங்கக் கம்பெனிகள், மாநில சர்க்காருக்குத் தர வேண்டிய 'ராயல்டி' பணத்தை இரட்டிப்பாக்கித் தரவேண்டுமென்று தங்கச் சுரங்க விசாரணைக் குழு சிபாரிசு செய்துள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதால், தங்கச் சுரங்கத்தையே மூடிவிட வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்படலாம் என கோலார் தங்கச் சுரங்கக் கம்பெனிகள் கூறுகின்றன.

முதன் முதலில், இப்பளுவைத் தாங்க முடியாமல் இரண்டொரு சுரங்கங்கள் மூடப்படலாம் என்றும், பின்னர், சுரங்கத்தொழில் முழுமையுமே மூடப்பட்டு விடலாமென்றும் அறிவித்துள்ளன.

கல்கத்தா, ஏப். 10—

இந்தியாவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் உருக்குத் தொழிற்சாலை, அனேகமாக கிழக்கிந்தியாவில் நிறுவப்படலாம் என்று பிரிட்டன் உருக்குத் தூதுக் குழுத் தலைவர் சர். எரிக் கோட்ஸ் கூறியிருக்கிறதாகப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இதுபற்றிய தனது அறிக்கையை மேற்படி தூதுக் குழு, வருகிற ஜூலைத் திங்களில் இந்திய சர்க்காரிடம் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

மேற்கு வங்கத்தில் இத்தூதுக் குழு இரண்டு வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்யுமாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஏகாதிபத்தியத்திற்கு - எதிராகக் கிளர்ச்சி!

போலீசார் மீது கம்பு-கற்கள் வீச்சு; - மாணவர்கள் மீது தடியடிப்பிரயோகம்

ஏதென்ஸ், ஏப். 10—

ஏதென்ஸ் நகர மாணவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் விளைவாக 3 போலீசாரும், 3 மாணவர்களும் காயம்பட்டனர் என்று செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது.

கிரீஸ்—சைப்ரஸ் இணைப்புக் கோரிக்கைக்காகவே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாம்.

சைப்ரசில், அடிமைகளாக்கப்பட்டு கொடுமைக்குள்ளாக்கப்படும் தங்கள் சகோதர மக்களிடையே ஒற்றுமையை வளர்த்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை முறியடிக்கவே மாணவர்கள் இவ்வித ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருக்கின்றனர்.

போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து மாணவர்களைத் தாக்கியிருக்கின்றனர்.

மாணவர்கள், தாங்கள் பல்கலைக் கழகத்திற்குச் செல்வதைப் போலீசார் தடை செய்யவே, மதிற்சுவர் மீதேறி உட்புக முயற்சித்திருக்கின்றனர். எனினும், போலீசார் அவர்களை எதிர்த்து பலவந்தமாகத் துரத்தியடித்திருக்கிறார்கள்.

மாணவர்களும், கற்களையும், கம்புகளையும் வீசியெறிந்து போலீசாரைக் காயப்படுத்தினராம்.

பிரிட்டிஷ் தூதுவராலயம், மற்றும் பெரிய பல்கலைக் கழகங்கள், முக்கிய வீதிகள் ஆகியவைகளில் பலத்த போலீஸ் காவல் ஏற்பட்டுள்ளதாம்.

★

'விடுதலை செய்!'

மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

நிகோசியா, ஏப். 10—

இங்குள்ள பள்ளிகளில் பயிலும் கிரேக்க மாணவர்கள் மற்றும் சில மாணவர்கள் சிறை வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தினராம்.

தெருத் தெருவாக அவர்கள் ஊர்வலமாகச் சென்று, 'சிறைச்சாலைகள் ஒழிக'—'துரோகிக் கும்பல்கள் ஒழிக' என்பன போன்ற எதிர்ப்புக் கோஷங்களை முழக்கிக் கொண்டு சென்றனராம்.

நிகோசியா சிறைச்சாலைக்கருகில் அவர்கள் சென்றதும், 'மாணவக் கைதிகளை விடுதலை செய்' என்று பலத்த கோஷங்களை முழக்கியிருக்கின்றனர்.

அம்மாணவர்கள், கிரேக்கக் கொடி ஒன்றைக் கையிலேந்திக் கொண்டு அங்குள்ள ஒவ்வொரு பள்ளியிலும் சென்று மாணவர்களைத் தங்களுடன் சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனராம். ஊர்வலத்தின்போது மாணவர்கள் கற்களை வீசி எறிந்தனரென்றும், இதன் விளைவாக ஒரு போலீசாருக்குக் காயம் ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது.

மாணவர்களின் இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்ட இரு பள்ளிகளின் தலைமை ஆசிரியைகள், மாணவிகளை வெளியேவிட மறுத்துவிட்டனராம். இதற்குள் அப்பள்ளியின் முன் நிறுத்தப்பட்டிருந்த தலைமை ஆசிரியை ஒருவரின் காரின் மீது மாணவர்கள் கல்லெறிந்து, அதைச் சேதப்படுத்தினராம்.

இவைகளுடன் மட்டும் மாணவர்கள் நின்றுவிடாமல், கோயில் மதிற்சுவர்களையும் தாண்டிக் குதித்து, கோயில்களில் புகுந்து மணி அடித்து கிளர்ச்சி நடத்தியிருக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதல்களையொட்டி, மாணவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு சிறைக்குள்ளாக்கப்பட்டனர் என்று கூறப்பட்டதை அதிகாரிகள் மறுத்திருக்கின்றனர்.

பெண் பூசாரிகளுக்கு வாரிசு உரிமை

இந்த பெண்ணுக்கு பூசாரி பதவியில் வாரிசு பாத்தியதை உண்டென்றும், அப்பெண்மணி தனக்குப் பதிலாக தகுதியுடைய வேறு எவரையேனும் வைத்துப் பூசை நடத்தலாமென்றுள்ள பழக்கம் இந்து சட்டத்தால் ஆட்சேபிக்கப்படவில்லை என்றும் தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி பி.ஜெகன்னாதன்' வழக்கொன்றில் தீர்ப்பளித்துள்ளார்.

பீகாரில் இரண்டு சகோதரர்கள் கூட்டுப் பூசாரிகளாகத் தொழிலாற்றி, அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு காலங் கடத்தி வந்திருக்கின்றனர். இடையில் அவர்களில் ஒருவர் காலமாகி விட்டதால், இறந்தவரது மனைவியார், தாம் தம்முடைய கணவரது வாரிசு என்றும், தமக்கும் அக்கோயில் வருமானத்தில் பாதியைக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கோரி வழக்குத் தொடர்ந்தார்.

'பூசாரி பதவிக்கு இந்து பெண்கள் வாரிசு உரிமை கொண்டாட முடியாது,' என்று பிரதிவாதி சார்பில் வாதிக்கப்பட்டது.

இறுதியில் தீர்ப்பளித்த நீதிபதி, அப்பெண்மணிக்கு வாரிசு உண்டென்றாலும், அவர் ஜீவனாம்சமாக அவ்வருமானத்தில் பாதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிட்டுள்ளார்.

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்

கண்டனத் தாள்

ஐந்தாண்டுத் திட்டத்தின் பேரால் இந்திய சர்க்கார் நடத்தியுள்ள அக்கிரமத்தைக் கண்டித்துப் பொதுமக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்ட, கண்டனத் தாள் அச்சாகி இருக்கிறது.

இரு வண்ணங்களில், படத்துடன்; லித்தோ முறையில் அச்சாகியுள்ள இந்தத் தாள்கள் எல்லா கிளைக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

தோழர்கள், இந்தத் தாள்களை, சேதமாகாத முறையில் பயன்படுத்த வேண்டுகிறோம்.

கண்டபடி சுவர்களில் ஒட்டி விடுவதைக் காட்டிலும், கழகப் பணிமனைகள், கழகத் தோழர்களின் இல்லங்கள், கடைகள் ஆகிய இடங்களில் தாளை அட்டையில் ஒட்டித் தொங்கவிட்டு வைப்பது பயனளிக்கும்.

அதிகமான நாட்களுக்கு இந்தத் தாள்களைப் பொதுமக்கள் பார்வையில் படும்படியான முறையில் பயன்படுத்த வேண்டுகிறோம்.

சந்தைகள் நடக்கும் இடங்களில் தாள்களை அட்டைகளில் ஒட்டி எடுத்துக் கொண்டு, தொண்டர்கள் சென்று வரலாம்; திருவிழாக்களிலே வேண்டாம்.

தி. மு. கழகம்—
தலைமை நிலையம்

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

வறுமையின் விளைவால் 'வழி' தவறும் மாதர்களுக்கு விடுதலை

மத்திய சர்க்கார் மசோதா உருவாகிறது

சென்னையின் தீவிர நடவடிக்கைக்குப் பாராட்டு

விபசாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை ஒழிக்க, தார்மீக சமூக ஆரோக்கியக் குழுவின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தியா முழுமையிலும் ஒரே மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய சர்க்கார் விரைவில் ஒரு மசோதா கொண்டு வருமாம்.

"விபசாரத் தொழில் நாட்டில் பெருகி வருவதற்கான காரணங்களில் வறுமை ஒரு முக்கியமான காரணமாகும் என்று குழு கருதுகிறது,"

என்று அக்குழுவின் தலைவியாரான திருமதி ராமா ராவ் கூறியிருக்கிறார்.

இது தவிர, சில மத சம்பிரதாயங்களும் விபசாரத்தை அனுமதிக்கின்றன என்றும் அவ்வம்மையார் ஒப்புக்கொண்டுள்ளார்.

பம்பாய் நகரப் பகுதியில் சுமார் 9,000 பேரும், கல்கத்தாவில் 44,000 பேரும் பகிரங்க விபசாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளனராம்.

சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் தேவதாசி ஒழிப்பு சட்டங்கள் அமுலிலிருந்து வருவதுபற்றிக் குறிப்பிடுகையில், அவ்வம்மையார், சென்னை மாநிலத்தில் அச்சட்டம் அதிக தீவிரமாக அமுல் செய்யப்பட்டிருப்பது பற்றி தம் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

சலுகை தந்தனர்--- கண்டு பிடித்தனர்!

அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கிலுள்ள நாகோர்காடியா பிரதேசத்தில் அசாம் எண்ணெய்க் கம்பெனி தோண்டிய 7 கிணறுகளில் 5 கிணறுகள் எண்ணெய் ஊற்றுக் கிணறுகளாகக் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அப்பள்ளத்தாக்குப் பிரதேசத்தில், பூகோள—பௌதிக சர்வே ஒன்று நடத்தப்பட்ட பின்னரே அக்கிணறுகள் தோண்டப்பட்டன என்றும் டெல்லி மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஆயுதப் படையினர் அதிகரிப்பு

கிளர்ச்சிகளை ஒடுக்க கடும் நடவடிக்கை

இரு மாநிலத் தகராறுகளின் எதிரொலி

மேற்கு வங்கத்தின் கோரிக்கைகளின் விளைவாக நடைபெறும் கலவரங்களையெல்லாம் தவிர்க்க, கோல்பாராவில், அசாம் சர்க்கார் ஆயுதந்தரித்த படையை மேலும் விரிவுபடுத்தியுள்ளனராம்!

சென்ற மார்ச்சு திங்கள் 30-ந் தேதி முதற்கொண்டு, இத்திங்கள் 4-ந் தேதி வரையிலும், கோல்பாரா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடைகளைச் சேதப்படுத்தியும், கல் வீசியும் கிளர்ச்சிக்காரர்களின் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக பத்திரிகைக் குறிப்பொன்றின் மூலம் அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது.

அந்த இடங்களில் வசித்து வந்த வங்காளிகளையும், அசாமிகளையும் ஏற்கனவே சர்க்கார் எச்சரித்திருந்தது.

இப்போது, சர்க்கார், கிளர்ச்சிகளில் ஈடுபடுகிற எவரையும் தயவு தாட்சணியமில்லாமல் கடும் நடவடிக்கைக்குள்ளாக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளதாம்.

குழப்பமடைந்துள்ள அங்கிருக்கும் அகதிகளை வேறு இடங்களுக்கு மாற்றிவிடும்படி உயர்தர அதிகாரிக்கு உத்தரவிட்டிருப்பதாகவும், பிற மக்களுக்கும் முழு பாதுகாப்புத்தர சர்க்கார் வாக்குறுதி தந்துள்ளதென்றும் கூறப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிகள் குறித்து விசாரணை நடத்தும்படி, மேற்கு வங்க மாநில முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய், அசாம் காங்கிரஸ் கட்சித் தலைவர் மகேந்திரமோகன் சௌதிரியைக் கேட்டுக்கொண்டுள்ளாராம்.

அசாம் மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் சில பகுதிகள் தன்னுடைய மாநிலத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்பதே மேற்கு வங்கத்தின் கோரிக்கையாகும்.

ஒப்பந்தங்கள் ரத்து?

சோவியத் நடவடிக்கை

மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் பாரிஸ் ஒப்பந்தங்களை மேற்கு வல்லரசுகள் உறுதி செய்வதாக இருந்தால் 1942-ம் ஆண்டில் பிரிட்டனுடனும், 1944-ல் பிரான்சுடனும் தான் செய்துகொண்ட ஒப்பந்தங்களை ரத்து செய்துவிடப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்ததற்கொப்ப தற்போது, அதற்கான முதல் நடவடிக்கையினை சோவியத் ரஷ்யா அறிவித்துள்ளது.

மந்திரி சபையின் இம்முடிவை, சர்க்காரின் நிர்வாகக் குழுவான பாராளு மன்றக் குழு இன்னும் சில வாரங்களில் உறுதியாக அங்கீகரித்து விடுமென்றும் கூறப்படுகிறது.

நலிவுற்று வாடும் குடும்பங்களின் 'கண்ணீரை'த் துடைக்கத் திட்டம்

கிராமாந்திரப் பகுதிகளில் அமுலாகும்

கிராமாந்திர பகுதிகளிலும் மேற்கொள்ள குடும்பக்ஷேமநலத்திட்டம் ஒன்றை மத்திய சமூக நலக்குழு தீட்டி வருவதாக, குழுத் தலைவியரான துர்காபாய் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

"நோய், வேலையில்லாமை அல்லது பெற்றோர் எவ்வகையிலேனும் சிறைப்படுவது போன்ற காரணங்களால் ஏற்படக்கூடிய 'தற்காலிக' துயரங்களைத் தவிர்க்க உதவி செய்வதே அத்திட்டத்தின் முக்கிய நோக்கம்," என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுவரையிலும், சுமார் 1,070 நிறுவனங்களுக்கு ரூ. 35 லட்சம் (சுமார்) கொடுக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் நாடு முழுமையிலும் உள்ள எல்லா சமூகநல நிறுவனங்களுக்கும், குழு, உதவி செய்யக்கூடிய நிலைமை ஏற்படும் வரையில் நாம் திருப்தி அளிக்கக்கூடியவர்களாக முடியாது என்றும் அவ்வம்மையார் கூறியிருக்கிறார்.

குமரப்பட்டியில் - உழவர்கள் கைது

பொன்னமராவதிக்கு அருகில் உள்ள குமரப்பட்டி எனும் கிராமத்தில் கிசான் தகராறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அங்குள்ள மிராசுதார் ஒருவருக்குச் சொந்தமான நிலமொன்றில், கிராமக் கிசான் சங்க உறுப்பினர் ஒருவரும், அவருடன் மற்றும் பலர் அத்துமீறிப் புகுந்து உழ ஆரம்பித்தனராம்.

பொன்னமராவதி போலீசார், அந்த உறுப்பினர் உட்பட 16 பேரைக் கைது செய்து இ.பி.கோ. 147, 447-வது பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.